**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.78/2017**

**வா.சா. – 1 பழனிச்சாமி**

**நாள். 04.08.2023**

**19 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் தரப்பிலான காஞ்சான் என்பவருக்கு சங்கன் முத்தரியார், வீரமலை முத்தரியார், மாரியம்மாள், சின்னம்மாள், பழனியம்மாள், கருப்பாயி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் மாரியம்மாள், சின்னம்மாள் , பழனியம்மர்ள, கருப்பாயி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நான்கு நபர்களும் இந்த வழக்கில் அவசியமான கட்சிக்காரர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் மொத்தம் 5 மின் இணைப்புகள் உள்ளன. அந்த 5 மின் இணைப்புகளும் சங்கன் முத்தரியார் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 5 மின் இணைப்பில் 4 சங்கன் முத்தரியார் பெயரில் உள்ளது. 1 மின் இணைப்பு என் அப்பா வீரமலை பெயரில் உள்ளது. நான் என் வழக்குரையில் 5 வது பாராவில் குறிப்பிட்டுள்ள 13.11.1907 ம் தேதியில் என் அப்பா வீரமலை வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன். ஆனால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக பட்டா வாதிகளின் பெயரில் தவறாக வழங்கப்பட்டது என்று பழனி ஆர்.டி.ஓ அலுவலகத்தில் பிரதிவாதிகள் தரப்பில் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு பிறகு தான், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக உத்தரவாகிவிடும் என்பதால் அதை தடுக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சித்தப்பா கருப்பணன், தாவா சொத்தில் உள்ள 4 வது இலக்க சொத்தில் 1 ஏக்கர் 88 செண்டை சங்கன் முத்தரியாருக்கு 1956 ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு 25 ஏக்கர் 67 செண்ட், 13 ஏக்கர் 1 செண்ட் ஆகியவைகள் தான் அவர்கள் சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள 2 வது, 3 வது, 5 வது அயிட்டங்களின் சொத்துக்கள் 4 வது அயிட்டத்திற்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 4 வது அயிட்டத்தில் 4 ஏக்கர் 62 செண்ட் மட்டும் தான் எனக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. அந்த 4 ஏக்கர் 62 செண்ட் இடத்தில் தான் நான் தனியாக கிணறு வெட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிணற்றிற்கு என் அப்பா வீரமலை பெயரில் மின் இணைப்பு வாங்கினோம். மின் இணைப்பு எண்.68. அதற்காக பிரதிவாதிகளிடம் ஆட்சேபணை இல்லை என்று அனுமதி ஏதும் வாங்கி

கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 4 வது அயிட்ட சொத்தில் உள்ள 6 ஏக்கர் 80 செண்ட்டில் அவர்கள் கிணறு வெட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அதற்காக நாங்கள் ஏதும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்தானது பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 4 வது அயிட்ட சொத்தானது கடந்த 50 வருடங்களுக்கு முன்பே பிரித்து, தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.08.04 17:03:16 +0530

Additional District Judge,

Dindigul.